IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# முல்லைப்பாட்டும் தமிழர் பண்பாடும்

**நெறியாளர்**

**தோ. இராஜம்**
உதவிப்பேராசிரியர்
தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்

**இரா. சரளா**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க இலக்கியம் பழமையானது. சங்க இலக்கியத்தின் தலையயை சிறப்பு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலப்பிரிவுகளும், அவற்றை ஒட்டியமைந்த மக்கள் பிரிவுகளும், திணை, துறை காட்டும் மக்கள் பழக்க வழக்கங்களும், ஒழுகலாறுகளும் ஆகும். அத்தோடு சங்ககால மக்கள் இயற்கையோடு ஒன்றி வாழ்க்கையை வாழ்ந்ததோடு இலக்கியங்களின் வழி பண்பாட்டு தலங்கள் பதிவு செய்திருப்பதை முல்லைப்பாட்டு வழி வெளிப்படுத்தும் வகையாக இவ் ஆய்வுச்சுருக்கம் அமைகின்றன.

**கலைச்சொற்கள்:** திணை, வாழ்வியல், பண்பாடு, நற்சொல் கேட்டல்.

**முன்னுரை**

காடும் காடு சார்ந்த இடமும் முல்லைநிலம் ஆகும். முல்லை நிலத்தில் வாழ்ந்த மக்கள் கோவலர், ஆயர் எனப்படுகின்றனர். இத்தகைய முல்லை நில மக்களின் வாழ்வை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது முல்லைப்பாட்டாகும். முல்லைப்பாட்டு அகத்திணைப்பாட்டாக இருந்தாலும் முல்லைத் தொடர்பான புற ஒழுக்கமாகிய வஞ்சி பற்றியும் குறிப்பிடுகிறது. முல்லைப்பாட்டு சுட்டும் முல்லைநில மக்களின் அகப்புற வாழ்க்கை வழியே அவர்களின் பண்பாட்டை மிக நுணுக்கமாகக் கூறுகிறது.

**பண்பாடு**

Culture என்ற சொல்லின் மொழிபெயர்ப்பு பண்பாடு ஆகும்.

> “பண்படுதல் என்பது திருந்துதல், செம்மைப்படுதல், தகுதியாதல் என்று பொருள்படும். தமிழர் பண்பாடு என்றால் தமிழ் மக்களுக்கே தனித்துரிய திருந்திய மனப்பான்மை என்று பொருள்பட வேண்டும்”[1]

என்று எஸ். வையாபுரிப்பிள்ளை குறிப்பிடுகிறார். முல்லைப்பாட்டு தமிழர்களின் நம்பிக்கைகள் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றைக் கொண்ட பண்பாட்டுச் சுரங்கம் ஆகும்.

**அகவாழ்வு (கற்பு)**

முல்லை நிலத்திற்கு உரிய இருத்தலாகிய ஒழுக்கம் தலைவி வழியே முல்லைப்பாட்டில் சுட்டப்படுகிறது. முல்லைத் திணைக்குரிய சிறப்பு கற்பு ஆகும். இருபாலருக்கும் உரிய பொதுவான கற்பொழுக்கத்தை முல்லைப்பாட்டு முன்வைக்கிறது. தலைவனுக்காக தலைவி ஆற்றியிருத்தலோடு தலைவனும் தலைவியிடம் கூறிய காத்தில் சொன்ன சொல் தவறாமல் வருவதுதான் கற்ப என்கிறது முல்லைப்பாட்டு. தலைவனும் தலைவியும் சொன்னசொல் தவறாமல் இணைந்து இனிய வாழ்க்கை மேற்கொள்வதே கற்பு என்று தமிழர் பண்பாட்டில் முதன்மையிடம் பெறும் கற்பை முல்லைப்பாட்டுச் சிறப்பிக்கிறது.

**நம்பிக்கைகள்**

மனித மனத்தில் ஏற்படுகின்ற அச்சத்தின் காரணமாகவும் இயற்கையோடு இணைந்த வாழ்க்கைக் காரணமாகவும் நம்பிக்கைகள் தோன்றுகின்றன. “நம்பிக்கைகளே மனித வாழ்வை இயக்குகின்றன. நம்பிக்கைகள் சமுதாய பண்பாட்டின் உணர்ச்சிக் கூறுகளின் தொகுதி” எனக் கூறுகிறார் சு. சக்திவேல். முல்லைப்பாட்டில் தமிழ் மக்களின் நம்பிக்கைகளைக் காணமுடிகிறது.

**நற்சொல் கேட்டல்**

ஒரு செயலைத் தொடங்கும் முன் அல்லது ஒன்றை நினைத்து இறைவனை வேண்டும் போது நல்ல சொற்களைக் கேட்பது நல்ல சகுனமாகக் கருதப்படுகிறது. இதனைச் சங்க மக்கள் விரிச்சி கேட்டல் என்பர். மகளிர் சிலர் எதிர்காலத்தில் நடக்கப்போவதை அறியும் வேட்கையுடன் இறைவனை வழிபட்டுப் பின் தெய்வத்தின் அருள்வாக்கை வேண்டி நிற்கின்றனர். அப்பொழுது

கன்றின் துயர்மிக்க ஒலி ஒலிக்கக் கேட்டு ஆயர்மகள் உன்தாயும் அதனைப் பின் தொர்ந்து வரும் ஆயரும் இந்த நாழிகையே வருவர் எனக் கூறுகிறாள். இதனை,

"சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி யாய்மகள்
நடுங்குசுவல் அசைந்த கையள் கைய
கொடுங்கோற் கோவலர் பின்னின்ற உய்த்தா
இன்னே வருகுவர் தாயர் என்போள்"[2]

என்ற அடிகள் விளக்குகின்றன. ஏதேனும் நல்லநிகழ்விற்குச் செல்வோர் நல்ல வார்த்தைக் கேட்பது இன்றும் காணப்படுகிறது.

**தெய்வ வழிபாடு**

பண்டைய தமிழ் மக்கள் இறைவழிபாட்டில் நெல்லையும் மலரையம் பயன்படுத்தி உள்ளதை முல்லைப்பாட்டு வழி அறியமுடிகிறது. நெல் விளைச்சலுக்கும் பல வளங்களக்கும் அடிப்படையாக இருப்பதால் நெல்லையம், மலர்களின் நல்ல மணம் எங்கும் பரவி இருப்பது போல எங்கும் நல்லவை விரவிக் காணப்பட வேண்டும் என்பதால் மலரையும் இறைவழிபாட்டில் பயன்படுத்தி உள்ளனர். இதனை,

"யாழிசை இனவண்டு ஆர்ப்ப நெல்லொடு
நாழி கொண்ட நறவீ முல்லை
அரும்பவிழ் அலரி தூஉய்க்கை தொழுது"[3]

என்ற அடிகள் விளக்குகின்றன. இறைவனை வணஙகும் பொழுது கைக்கூப்பி வணங்கும் வழக்கம் இருந்துள்ளதையம் அறியமுடிகிறது. முல்லைமலர் மலர்ந்து மணம் வீசுவதைக் கொண்டு மாலைப்பொழுது என அறிந்து மாலையில் வழிபாடு நடத்தியுள்ளதையும் முல்லைப்பாட்டு வழி அறியமுடிகிறது.

**பழக்கவழக்கங்கள்**

சங்ககால மக்கள் குடும்பவாழ்வில் பலவகையான பழக்க வழக்கங்களைக் கொண்டிருந்தனர் என்பதை முல்லைப்பாட்டு வழி அறியமுடிகிறது.

**விளக்கு**

பண்டைய தமிழ் மக்கள் பாவை விளக்கையும், மணிவிளக்கையும் பயன்படுத்தி உள்ளனர். பாசறையில் உள்ள இருளினை அகற்ற பாவை விளக்குகளையம் மணிகளால் ஆன விளக்ககளையம் ஏற்றியுள்ளனர்.

"நெய்யுமிழ் சுரையர் நெடுந்திரிக் கொளிஇக்
கையமை விளக்கம் நந்துதொறு மாட்ட"[4]

"திருமணி விளக்கம் காட்டி"[5]

இன்றைய காலகட்டத்தில் பாவை விளக்குகள் பயன்படுத்துவது அருகியே காணப்படுகிறது.

**போர்படைகளும், கருவிகளும்**

யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை ஆகிய நால்வகைப் படைகளைப் பயன்படுத்தி உள்ளனர். இதனை.

"எடுத்தெறி எஃகம் பாய்தலின் புண்கூர்ந்து
பிடிகணம் மறந்த வேழம் வேழத்துப்
பாம்புபதைப் பன்ன பரூஉக்கை துமியத்
தேம்பாய் கண்ணி நல்வலம் திருத்திச்
சோறுவாய்த் தொழிந்தோர் உள்ளியும் தோல்துமிபு
வைந்நுனைப் பகழி மூழ்கலிற் செவிசாய்த்து
உண்ணாது உயங்கும் மா"[6]

"வினைவிளங்கு நெடுந்தேர் பூண்ட மாவே"[7]

என்ற அடிகள் விளக்குகின்றன. போர்புரிவதற்கான கருவிகளாக வளைந்தவில், பூ வேலைப்பாடு அமைந்த வேற்படை, கேடயம், வாள், பகழி போன்றவற்றை பயன்படுத்தியுள்ளதையம் அறியமுடிகிறது. மேலும் ஆநிரைகளை மேய்க்க ஆயர்கள் வளைந்த கோலினைப் பயன்படுத்தி உள்ளனர்.

"கொடுங்கோற் கோவலர்"[8]

யானையை அடக்க யானைப்பாகர் கவைமுள் என்ற கருவியைப் பயன்படுத்தி உள்ளனர்.

"கவைமுட் கருவியின்"[9]

குதிரையை ஓட்டுவதற்கு மத்திகை என்னும் கரவியைப் பயன்படுத்தியுள்ளனர்.

"மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை"[10]

என்பதையும் முல்லைப்பாட்டு வழி அறியமுடிகிறது.

**பாசறை**

தமிழர்கள் பாசறை அமைப்பதிலும் சில வழிமுறைகளைப் பின்பற்றியுள்ளனர். அரசர்கள் வாடைகாலத்திலும் வேனிற்காலத்திலும் போர்புரியச் செல்வர். மன்னன் பகையரசர்களுக்குப் பாதுகாப்பாக இருந்த காட்டை அழித்து முட்களை மதிலாகக் கொண்டு பாசறை அமைப்பர். பாசறை ஒரு சிறு நகரம் போல் அமைக்கப்படும் முள் மரங்களின் பெரிய கிளைகளை வெட்டி கோட்டையைச் சுற்றி அமைக்கப்படும் மதில் பொல் நட்டு வைப்பர். நான்கு தெருக்கள் சந்திக்கும் இடத்தில் மதநீர்வடியும் களிறுகளைக் காவலாக நிறுத்திவைப்பர். பழுதடைந்த படைக்கருவிகளால் பாசறை அமைப்பர் பாசறையில் வீரர்களுக்கு என்று தனியிடமும் மன்னர்க்கு என்று தனியிடமும் அமைக்கப்பட்டிருக்கும். பாசறையில் மன்னன் தங்கும் இடத்தில் புலி பொறிக்கப்பட்ட தொடர் சங்கிலி தொங்கவிடப்பட்டிருக்கும் (மு.பா. 62, 63) போர் முடிய பலநாட்கள் ஆகக்கூடும் என்பதால் படைகளுக்குத் தேவையான நீர் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு காட்டாறு சூழ்ந்த இடத்தில் பாசறைகள் அமைக்கப்பட்டுள்ளதை முல்லைப்பாட்டு வழி அறியமுடிகிறது (மு.பா. 24-42). பெண்களும் அக்காலத்தில் போருடைதரித்து போர்களம் சென்றுள்ளனர். இவர்கள் பாசறையில் இரவுப் பொழுதில் பாவைவிளக்கு அணையாமல் பாதுகாக்கும் பணியைச் செய்ததோடு வீரம் உடையவர்களாகவும் இருந்துள்ளனர். தற்காப்பக் கருதி வாளை கையில் பற்றி உள்ளனர். இதன்வழி போர்க்களத்திற்குப் பெண்களும் அழைத்துச் செல்லப்பட்டதை அறியமுடிகிறது. இதனை,

"இரவுபகற் செய்யும் திண்பிடி ஒள்வாள்
விரவுவரிக் கச்சின் பூண்ட மங்கையர்"[11]

என்ற அடிகள் விளக்குகின்றன.

**ஆடை அணியும் வழக்கம்**

தமிழர்கள் நம் நாட்டுப் தட்பவெப்ப நிலைக்கேற்ற ஆடைகளை அவர் அவர் வசதிக்கேற்ப அணிந்துள்ளனர். இவ் அடைகள் அக்கால மக்களின் தொழிலைக் காட்டுவதாயும் அமைந்திருந்தது. பெண்கள் போர் பாசறையில் பல வண்ணங்களால் ஆன கச்சு என்ற மோடையை அணிந்துள்ளனர். ஆண்கள் வெள்ளைத் துணியால் ஆன தலைப்பாகையைக் கட்டியிருந்தனர். இதனை,

"துகின் முடித்துப் போர்த்த தூங்கள்"[12]

என்ற அடி விளக்குகிறது. மிலேச்சர் படம் என்னும் ஒருவகை ஆடையை அணிந்துள்ளனர். மன்னர்களுக்குக் காவலாய் இருந்த அயல் நாட்டவரான யவனர்கள் மெய்ப்பை என்ற ஆடையை அணிந்துள்ளனர். இதனை,

"மெய்ப்பை புக்க வெருவரும் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்"[13]

என்ற அடிகள் வழி அறியமுடிகிறது.

**நேரத்தை அறியும் கருவி**

"கன்னல்" என்ற கருவியைக் கொண்டு சங்ககால மக்கள் நேரத்தைக் கணக்கிட்டுள்ளனர். இதனை,

"குறுநீர்க் கன்னல் இனைத்தென்று இசைப்ப"[14]

என்ற அடி விளக்குகிறது.

**முடிவுரை**

முல்லைப்பாட்டு வழி முல்லைநில மக்களின் அகப்புற வாழ்வை அறியமுடிகிறது. ஆணும் பெண்ணும் உண்மையுடன் இணைந்து வாழும் வாழ்வே சிறந்த வாழ்வாகப் போற்றப்படுகிறது. பண்டைய தமிழ் மக்கள் இறைவழிபாட்டிலும் சகுனம்பார்ப்பதிலும் கொண்டிருந்த நம்பிக்கைப் புலப்படுகிறது. மாலையில் வழிபாடு நடந்ததையம் வழிபாட்டில் நெல்லும், மலரும் பயன்படுத்தும் பழக்கம் இருந்ததையும் முல்லைப்பாட்டு வழி அறியமுடிகிறது. பாசறையமைப்பிலும் கலைநயத்தைக் காணமுடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. எஸ். வையாபுரிப்பிள்ளை, தமிழர் பண்பாடு, ப.75.
2. முல்லைத்திணை, பா. 12-16
3. மேலது., பா. 8-9.
4. மேலது., பா. 48-49.
5. மேலது., பா. 63.
6. மேலது., பா. 68-74.
7. மேலது., பா. 103.
8. மேலது., பா. 15.
9. மேலது., பா. 35.
10. மேலது., பா. 59.
11. மேலது., பா. 46, 47.
12. மேலது., பா. 53.
13. மேலது., பா. 60, 61.
14. மேலது., பா. 58.

**துணைநின்ற நூல்கள்**


1. வையாபுரிப்பிள்ளை. எஸ்., : **தமிழர் பண்பாடு**
தமிழ்ப் புத்தகாலயம்
திருநெல்வேலி
சென்னை-05
நான்காம் பதிப்பு-1958

2. சுப்ரமணியன். (உ.ஆ.), : **பத்துப்பாட்டு மூலமும் உரையும்**
மெய்யப்பன் தமிழாய்வகம்
53, புதுத்தெரு
சிதம்பரம்
முதற்பதிப்பு-2000

3. நாகராசன். வி. (உ.ஆ.), : **பத்துப்பாட்டு**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
அம்பத்தூர்
சென்னை-98